# பெல்மதுல்ல பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜனவரி 28 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெல்மதுல்ல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது வாடகைக் கொள்வனவுத் தவனைப்பணக் கொடுப்பனவின் கீழ் சுவீகரிக்கப்பட்ட பீடீ 7614 இலக்க கெப் வண்டியினது பெறுமதியான ரூபா 6,670,000 மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும், வாடகைக் கொள்வனவுக் கடன் கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 8,453,563 செலவு வைக்கப்படவில்லை. அக் கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய ஆரம்ப தவணைக் கொடுப்பனவாகிய ரூபா 2,500,000 மற்றும் வாடகைக் கொடுப்பனவுத் தவணைப் பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 699,856 என்பன வரவு வைக்கப்படவில்லை.

(ஆ) வாடகைக் கொடுப்பனவு வசதிகளைப் பெற்ற சொத்துக்களது பெறுமதிக்குரிய மொத்த வட்டியையும் கணித்து அதனைத் வட்டித் தொங்கற் கணக்கில் வரவு வைத்தும் கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைத்தும் கணக்கீட்டு ஆண்டுகளுக்குரிய வட்டியாகிய ரூபா 443,000 வருமான, செலவினக் கணக்கில்

வரவு வைக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறான சீராக்கல் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) நான்கு பல்வேறு பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரமான மீளாய்வாண்டினது பெறுவனவுகளுக்கும் உபபதிவேடுகளின் பிரகாரமான தொகைக்குமிடையே ரூபா 262,544 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) தேசிய சேமிப்பு வங்கி நிலையான வைப்புகளிலிருந்து மீளாய்வாண்டில் பெறவேண்டிய ரூபா 32,040 வட்டியானது வருவாயாகக் கணக்கிலிடப்படவில்லை.

(உ) முத்திரைக் கட்டணத்தின் மீளாய்வாண்டினது ஆரம்ப பேரேட்டு மீதி ரூபா 8,039,329 ஆகும். முன்னைய ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணப் பெறுவனவு ரூபா 12,141,570 ஆகும். இதற்கமைய, கடன்கொடுத்தோர் மீதியிலும் கூடுதலான பெறுவனவாகிய ரூபா 4,102,241 திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக அது முத்திரைக் கட்டணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதால் ஆண்டின் இறுதியில் அக் கணக்கு மீதி அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு முடிவில் 6 கணக்கீட்டு விடயங்களின் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் உபபதிவேட்டிற்கும் இடையே ரூபா 20,262,638 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 14,521,996 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 341,861 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 10,420,519 ஆகும்.

**2.2 வங்கிக் கணக்கு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்த ரூபா 56,539 கூட்டுத்தொகையுடைய 7 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 189 க்கமைய ரூபா 35,470 கூட்டுத்தொகையுடய கொடுப்பனவு மறுக்கப்பட்ட 6 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2003,2004,2007 ஆம் ஆண்டுகளில் நிறுவனம் பெற்ற ரூபா 533,854 கூட்டுத்தொகையுடைய காசோலைகள் மற்றும் பிற பெறுவனவுகள் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படாமை சம்பந்தமாகத் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அவற்றைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) 1993 முதல் 2009 வரை நாணாவித கணக்கீட்டு வழுக்கள் காரணமாக காசோட்டின் வங்கிக் கணக்கில் ரூபா 18,851 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 1,761 | 545 | 3,587 |
| (ii) | குத்தகை வாடகை | 1,536 | 1,265 | 365 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 915 | 813 | 3 |
| (iii) | பிற வருவாய் | 5,253 | 12,503 | - |

**2.3.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 10,407,062 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 697,759 |

**2.4 தண்டப் பணம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பனவுகளுக்கு எதிராக முன்னைய ஆண்டின் பொருட்டு ரூபா 673,045 தண்டப் பணம் விதிப்பது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டவாறுள்ளது.

**2.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்**

**கீழே குறிப்பிடப்பட்டவை அவதானிக்கப்பட்டன.**

(அ) 2007 ஆம் ஆண்டில் ரூபா 245,000க்குக் கொள்வனவு செய்யப்பட்ட கொங்கிரீட்ட கலவை இயந்திரம் 2010 ஆம் ஆண்டில் செயற்படாது போயிற்று எனினும், இயந்திரத்தைப் பழுதுபார்த்து வாடகைக்கு வழங்குவதன் மூலம் சபைக்கு வருவாயை ஈட்டிக் கொடுத்திருந்தது. அல்லது அதனைப் பழுதுபார்க்க முடியாதெனின் ஏலத்தில் விற்பனை சபைக்கு வருவாயை ஈட்டித் தருவதற்கோ முடியாதவாறு அது சபை வளாகத்தில் இருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் ரூபா 215,000 பெறுமதியில் நீர் பவுசர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அதன் மூலம் குறித்த வேலையைப் பெற முடியாதவாறு அது தரித்து வைக்கப்பட்டிருந்தது.

**2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஜனவரி முதல் செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் சபையின் தலைவரது பயணச் செலவு மற்றும் சீவனப்படியாக ரூபா 68,500 சபையின் நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 டிசெம்பர் 22 ஆந் திகதிய ம.பா.கொ/சுற்றறிக்கை/2009 (திருத்தம்) எனும்

இலக்கமுடைய சுற்றறிக்கைக்கு முரணாக கடமை உறுதி செய்யப்படவோ கூட்டத்திற்கான அழைப்புக் கடிதமோ சமர்ப்பிக்கப்படவில்லை. இக் கொடுப்பனவானது நேரடியாக கடமையின் நிமித்தமான செலவினமா எனக் கணக்காய்வில் திருப்தியுற முடியாதிருந்தது.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 386(6) க்கு முரணாக 15 சந்தர்ப்பங்களில் ரூபா 465,720 பெறுமதியுடைய திறந்த காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன.

## 2.7 வாகனக் கட்டுப்பாடு

(அ) இரு கெப் வண்டிகளான எல்எப்4824 மற்றும் பீடீ7614 என்பவற்றில் நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் மைலோமீட்டரில் காணப்படும் எண்ணிக்கை உள்ளடக்கப்படாததுடன் சாரதிகளின் சுய மதிப்பீட்டிற்கமைய எரிபொருள் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 776,110 பெறுமதியான 6,735 லீட்டர் எரிபொருளின் பாவனை தொடர்பாகக் கணக்காய்வில் திருப்தியுற முடியவில்லை.

(ஆ) ஓட்ட அட்டவணைகளில் ரூபா 273,253 பெறுமதியான 2,326 லீட்டர் எரிபொருள் உட்சேர்க்கப்பட்டமை உறுதி செய்யப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) கெப் வண்டிகளாகிய டபிள்யூபீ எல்எப்4824 மற்றும் பீடீ 7614 என்பவற்றின் ஓட்ட அட்டவணைகளில் எரிபொருள் கணக்கிணக்கஞ் செய்யப்படும்போது ஏறக்குறைய ரூபா 8,110 பெறுமதியான 70.35 லீட்டர் குறைவு கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய வாடகைக் கொள்வனவு அடிப்படையின் கீழ், அரசாங்க கொள்வனவு நடைமுறைகளைக் கடைப்பிடித்து டபள் கெப் வண்டி கொள்வனவு செய்யப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின்போது ரூபா 6,670,000 பெறுமதியான டபள் கெப் வண்டியொன்று தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.8 ஒப்பந்த நிர்வாகம்

(அ) மாகாண வீதி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 954,000 மூலம் கெஹெல்பத்தர கால்வாயினூடாக பக்கப் பாலத்தை நிர்மாணிப்பதற்கென அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றுடன்

உடன்படிக்கையில் ஈடுபட்டு 2011 டிசெம்பர் 29 அன்று வேலை முடிவுற்று இறுதிக் கொடுப்பனவாக ரூபா 511,193 வழுங்கப்பட்டிருந்தது. மழைக் காலங்களில் நீரின் மட்டம் பாலத்தின் மேலாக வருவதால் பாலத்தின் இடது மூலையின் கீழ் பகுதி தென்படும் விதத்தில் ஓரப்பகுதி முற்றாக அடித்துச் செல்லப்பட்டிருந்தமை 2012 நவம்பர் 30 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையில் புலனாகியது. நீர் வடிந்து செல்வதற்கு இலகுவாக தட்டுப்பாலத்தை நிர்மாணிப்பதற்குப் பதிலாக 3 அடிச் சுற்றளவுடைய ஹியூப் புழாய்களைப் பயன்படுத்தியமையால், குறித்த ஓரப் பகுதி உடைவதற்கு ஏதுவாயிற்று என நேரடிப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. இந் நிலைமையானது பாலம் நிலைத்திருப்பதற்குப் பாதகமாக அமைந்திருந்தது. அவ்வாறே, வேலை விடயம் இலக்கம் 09 இன் கீழ் மேற் பரப்பில் மண்னைப் பரவி மட்டஞ் செய்வதற்கு ரூபா 24,359 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், பாலத்தின் மேற் பரப்பில் போடப்பட்ட மண்ணில் ஒரு பகுதி முற்றாகக் கழுவிச் செல்லப்பட்டிருந்தது.

(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவ நிலைய நிர்மாண வேலைத் திட்டமிடப்பட்ட நீலகம தோட்டத்தில் 1 ஹெக்டயர் காணியின் ஒரு பகுதி பிரதேச சபைக்குச் சொந்தமானது என்பது உறுதி செய்யப்படாது குறித்த நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டவாறிருந்தது.

## 2.9 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒன்பது செலவினத் தலைப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 75,000 முற்றாக செலவழிக்கப்படவில்லை.

(ஆ) முச் சக்கர வண்டிகளைத் தரித்து வைப்பதற்கு உப விதிகளை அமைத்து வருடாந்தம் அல்லது மாதாந்தம் சபை வருவாயை ஈட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படாதபோதும், முச் சக்கர வண்டி பெயர்ப் பலகையையும் இலச்சினையையும் அமைப்பதற்கு ரூபா 26,500 செலவிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 177(1) க்கு முரணாக 49 சந்தர்ப்பங்களில் சேகரிக்கப்பட்ட தீர்வையும் வரியும், வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம், விற்பனை வரி ஆகிய ரூபா 376,776 குறித்த சேகரிக்கும் உத்தியோகத்தரால் 2 முதல் 27 நாட்கள் தாமதத்தின் பின்னர் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபையில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 312,066 கடனானது அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்